EGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ... அணா

இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 173

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 17உ வெள்ளி (1—1—54) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 18உ சனி (2—1—54)

'நமது அறப்போர் டில்லிக்கு அச்சமூட்டி இருக்கிறது!"

—(:)—

'பகுத்தறிவுப் பேச்சால் 'பார்ப்பனீய சாம்ராஜ்யம்' சரிந்து கொண்டு வருகிறது!"

—(:)—

நாம் ஒட்டிய 'கல்லக்குடி' தாள் போலீசாரால் பாதுகாக்கப்படுகிறது!"

—[o]—

அரூர் கூட்டத்தில் ஈ.வி.கே. சம்பத்

அரூர், டிச. 31—

"மக்களின் ஆதரவு தி. மு. கழகத்திற்கு அனுதினமும் பெருகி வருகிறது என்றால், அது, பண பலத்தாலோ அல்லது பத்திரிகை வளமையாலோ அல்ல; அசைக்க முடியாத, நியாயமான பல ஜீவ லட்சியங்களை அது தன்னகத்தே கொண்டுள்ளதால்தான், அது உயருகிறது—மக்கள் ஒப்புதலைப் பெறுகிறது."

"இந்த நாட்டுச் சமுதாயம், சடந்த 2,000 ஆண்டுகளாகப் பார்ப்பனீயத்துக்கு அடிமைப்பட்டு, பாழ்பட்டுப் போயிற்று. ஆனால் 25 ஆண்டுகளாக நமது பகுத்தறிவுப் பிரசாரத்தால், இங்கே நீண்ட காலமாக அமைக்கப்பட்டுள்ள 'பார்ப்பன சாம்ராஜ்யம்', சுக்கு நூறாகச் சிதறிப்போக ஆரம்பித்தது. அந்த நிலைமையை மாற்றி, மீண்டும் இந்த நாட்டில் பார்ப்பனர்களுக்கு ஆதிக்கம் ஏற்படுத்த ஆச்சாரியார் புதிய கல்வித் திட்டம் ஒன்றைப் புகுத்தி, வர்ணாசிரம முறையில், நமது சமுதாயத்தில், ஜாதி வேறுபாடுகளை வலியுறுத்தப் பார்க்கிறார்; ஜாதி வேறுபாடுகளைப் போக்கி, இங்கே வாழும் அனைவரையும் மனிதர்கள் என்ற பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற சமுதாயக் கொள்கையுடன் பணியாற்றும் தி. மு. கழகம், ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை எதிர்த்துப் போராடியது."

"பொருளாதாரத் துறையில், வடநாடு, தென்னாட்டு மக்களைச் சுரண்டி வாழ்வது கூடாது என்று நாங்கள் கூறுகிறோம்; கல்லக்குடியிலே, வடநாட்டு மனிதனுக்கு ஏன் ஆதிக்கம் வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம்; டால்மியார்—ஏராளமான பணத்தைக் கொண்ட பணப் பெட்டியின் சாவியைத் தன் கையில் கொண்டுள்ளவன் என்பதைத் தவிர, அந்த மனிதனுக்கு வேறு என்ன தகுதி? அவன் என்ன விஞ்ஞானியா? கவிஞனா? கல்லக்குடியிலே வாழும் திராவிடர்களைச் சுரண்டி வாழும் அவன் பெயரை ஏன், அழகான தமிழ்ப் பெயருக்கு மாற்றாக வைக்க வேண்டுமே? அங்கே, நாங்கள் நடத்திய போராட்டம் வெற்றியளித்திருக்கிறது."

"அங்கே நமது கழகத் தோழர்கள் ஒட்டிய தாளை யாரும் கிழித்து தெரியாமல் போலீசார் பாதுகாத்து வருகின்றனர். அந்த இடத்தைப் பார்க்கச் செல்லும் நமது தோழர்களை அங்குள்ளோர் பார்த்து 'இது கருணாநிதி ஒட்டிய தாள்; இது கண்ணதாசன் ஒட்டியது; அவைகளை யாரும் சேதப்படுத்தாது காத்துவருகிறோம்,' என்று கூறுகிறார்களென்றால் நாம் அங்கே வெற்றியடைந்தோம் என்பதைத் தவிர வேறு என்ன பொருள்?"

—இவ்வாறு, 26—12—53-ல், அரூரில், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கூறினார்.

மேலும் அவர் பேசியதாவது:—

"என்னை வரவேற்ற உங்கள் அனைவருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஜூலை மாதத்தில்தான் தி. மு. கழகத்தின் மகத்தான சக்தியை உணர்ந்துகொள்ள அனைவருக்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. தி. மு. கழகம் நடத்திய மூன்று பெரும் போராட்டங்களால் டில்லி ஆட்சிபீடத்தில் ஒரு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

'அரசியல் துறையிலே நமது கருத்தென்ன என்பதை, நேரு அவர்களுக்கு உணர்த்தத்தான், ரயில் நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. அதன் காரணமாக, நேரு நம்மைப் பற்றி உணர்ந்து கொண்டார். நமது ரயில் நிறுத்தப் போராட்டத்தைக் கிண்டல் செய்த காங்கிரசார், 1942-லே, ரயில்களை நிறுத்தாத போராட்டம் நடத்தினார்களா? பட்டப்பகலில், முன் அறிவிப்பின்றி, ரயில்களை நாம் நிறுத்தவில்லை; பல நாளைக்கு முன்பாகவே அறிவித்துவிட்டுத்தான் இரயில் நிறுத்தத்தில் ஈடுபட்டோம். நம்முடைய அரசியல் நடவடிக்கைகளில் மறைவு ஒன்றும் கிடையாது. நாம் கண்ணியத்துடன் நடந்து கொண்டோம்—அந்தப் போராட்டமும் வெற்றி பெற்றது.

இன்று, நாட்டு மக்களின் உண்மையான விடுதலை இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதன்பால், மக்கள் காட்டும் ஆதரவு, நல்லதோர் நம்பிக்கையை அளிப்பதாக இருக்கிறது."

ஆதித்தன் மிரட்டல்!

பனை மர வரியை ரத்து செய்யாவிடில் ராஜினாமா செய்வாராம்!

சென்னை, ஜன. 1—

சென்னை சர்க்கார் உடனடியாக பனை மர வரியை ரத்து செய்யாவிடில் தனது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிடப் போவதாக நேற்று மேல் சபையில் ஆதித்தன் தெரிவித்தார்.

அவர் பேசும்போது, 1948-லேயே பனை மர வரியை சர்க்கார் ரத்து செய்வதாகக் கூறியிருந்ததாகக் குறிப்பிட்டார். அந்த வாக்குறுதியை சர்க்கார் நிறைவேற்றாவிடில் தாம் பதவியை விட்டுவிலகி விடுவதாகவும் கூறினார்.

சென்னை கல்வி இலாகாவின் உதவி டைரக்டர் தோழர் என். டி. சுந்தரவேலு, சென்னை மாநில சாரணர் இயக்கத்தின் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வேலூரில் அண்ணாதுரை

★

3—1—54 ஞாயிறு காலை 9 மணிக்கு வேலூர் நகராண்மைக் கழக அலுவலகத்தில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்படும். மாலை 6 மணிக்கு, அவர், கோட்டை வாசலுக்கு எதிரிலுள்ள இராஜாஜி பூங்காவில் நகரசபையாரால் நிறுவப்பட்டிருக்கும் காந்தி அடிகளின் உருவச் சிலையைத் திறந்து வைப்பார்.

சம்பள மசோதாவிற்கு சட்டசபை அனுமதி கோரப்படுகிறது!

ரூ. 500-ஆக குறைத்தும் ரூ. 1000-மே அமைச்சர்கள் பெறுகின்றனர்

கர்நூல், டிச. 31—

ஆந்திர சர்க்கார் அமைச்சர் சம்பள மசோதாவை, மீண்டும் சட்டசபையில் மறு யோசனைக்கு வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

ஏற்கனவே ஆந்திர சட்டசபையில் அமைச்சர் சம்பள மசோதா கொண்டு வரப்பட்டபோது, மசோதாவில் குறிப்பிட்டிருந்த ரூ. 1,000-த்தை ரூ 500-க்குக் குறைத்துவிட்டது, சட்டசபை! ஆனால், பார்லிமெண்டரி செயலாளர்களுக்கு ரூ 500-ம், முதல் பார்லிமெண்டரி செயலாளருக்கு ரூ. 600-ம் என அந்த மசோதாவில் குறித்திருந்ததை சட்டசபை அனுமதித்திருக்கிறது. இந்த இரண்டிற்கும் உள்ள பேதா பேதத்தைத் தவிர்க்க வேண்டியது முக்கியமாகிறது.

இதன் பலனாக, சட்டசபை நிறைவேற்றிய சம்பள மசோதாவிற்கு இன்னும் கவர்னர் ஒப்புதல் கொடுக்காமல் இருக்கிறார். எனவே, அமைச்சர்கள் ரூ. 1000-மே சம்பளமாகப் பெற்று வருகிறார்கள்.

'யாரையும் புண்படும்படி பேச மாட்டோம்'

இளைஞர் காங்கிரசார் மன்னிப்பு கோரல்

மதுரை, டிச. 31—

"நாங்கள் அனைவரும் காந்தியவாதிகள்; திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற எதிர்க் கட்சிகளைத் தாக்கிப் பேச வேண்டுமென்பது எங்கள் நோக்கமல்ல; யாரையும் புண்படும் முறையில் பேசமாட்டோம்,"

என்று, ஒரு மனுவை மதுரை இளைஞர் காங்கிரஸ் சார்பில், வழக்கறிஞர் லெட்சுமிநரசிம்மன், மாஜிஸ்திரேட்டிடம் தாக்கல் செய்தார். இதன்மேல் மாஜிஸ்திரேட் வழக்கை தள்ளுபடி செய்தார்.

பொதுக் கூட்டங்களில் மாற்றுக் கட்சியினரை மட்டரகமான முறையிலும், ஒழுங்கீனமாகவும் பேசியதாக இளைஞர் காங்கிரஸ் தோழர்களான வி. கோபால், எம். வீராசாமி, எம் அலியார், பிச்சை ஆகியோர் மீது இதுவரை நடைபெற்ற வழக்கை, நகர முதல் மாஜிஸ்திரேட் பி என். தங்கமணி அவர்கள், 28—12—53-ல், தள்ளுபடி செய்தார்.

இந்தத் தோழர்கள் மீது ஏற்கனவே, ஜாமீன் வழக்கு ஒன்று நடைபெற்று வருகிறது; அந்த வழக்கு முடியும் வரையில், 'எந்த விதமான ஒழுங்கீனத்திலும் ஈடுபடமாட்டோம்' என்ற ஜாமீன்பேரில், இவர்கள், இடைக்கால ஜாமீனில் வெளிவந்தனர். ஆனால், ஆச்சாரியார் வினோபாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாற்றுக் கட்சியினரை, ஒழுங்கீனமான முறையில் பேசியதாக அவர்கள் மீது இவ்வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இறக்குமதி கட்டுப்பாடு

புதுடெல்லி, டிச. 30—

1953 ஜூலை டிசம்பரில் உள்ளதைப்போல 1954 ஜனவரி—ஜூனில் மத்திய சர்க்காரின் இறக்குமதிக் கொள்கை அநேகமாக அப்படியே இருக்குமென இன்று, வர்த்தகத் தொழில் மந்திரிாலயம் விடுத்துள்ள அறிக்கையிலிருந்து தெரிகிறது. 22 வகைகளில் இறக்குமதி கட்டுப்பாடு தளர்த்தப்பட்டிருக்கிறது என அவ்வறிக்கை கூறுகிறது.

கல்கத்தா டெலிபோன்களில் 'ஆட்டோமேடிக்' முறையை ஏற்படுத்துவதில் ஆலோசனை கூறுவதற்காக, நான்கு பிரிட்டிஷ் நிபுணர்கள் இந்தியாவுக்கு புறப்பட்டுள்ளனர். இந்திய சர்க்கார் அழைப்பின் பேரில் வரும் இவர்கள் மூன்று ஆண்டு காலம் [illegible]

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 1—1—54 வெள்ளி

'கல்நெஞ்சல்ல!' ஆனால்?

இரண்டு தினங்களுக்கு முன்பாக, சென்னை மேல்சபையில், சபை உறுப்பினர் தோழர் எம். கே. எம். அப்துல் சலாம் அவர்களால், சர்க்கார் வாபஸ் வாங்கிய சில முக்கியமான வழக்குகள் பற்றி, பிரதமர் ஆச்சாரியாரிடம் கேட்கப்பட்டு இருக்கின்றன. 1—4—1952-லிருந்து, 30—9—1953 வரையில் கம்யூனிஸ்டு கட்சியினர் மீது தொடுக்கப்பட்டிருந்த 4 வழக்குகளை சென்னை சர்க்கார் வாபஸ் வாங்கியுள்ளது என்று, சி. ஆர். பதில் கூறி இருக்கிறார். இந்த வழக்குகள் சம்பந்தமாக சர்க்காருக்குச் செலவான தொகை 37,000 ரூபாய் என்றும் அவரே கணக்கும் கொடுத்திருக்கிறார்,

இந்த நான்கு சதி வழக்குகளையும் வாபஸ் வாங்கினதற்கான காரணத்தையும் அமைச்சர் ஆச்சாரியார் விளக்கிக் கூறியிருக்கிறார். அதாவது, இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் கம்யூனிஸ்டு கட்சி சார்புடையவர்கள் என்றும், அந்தக் கட்சி இப்பொழுது பலாத்காரத்தைக் கைவிட்டுவிட்டு, சட்ட சபையிலும், பத்திரிகை வாயிலாகவும், பொதுக்கூட்டங்கள் மூலமாகவும் கிளர்ச்சி செய்வது என்ற அமைதியான முறைகளுக்குத் திரும்பி இருப்பதாலும், அக்கொள்கையையே தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கு அந்தக் கட்சிக்கு ஊக்கமூட்டுவதற்காகவும், மேற்படி சதி வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கருணை காட்டப்பட்டது என்றும், அதன் விளைவாக வழக்குகள் வாபஸ் வாங்கிக் கொள்ளப்பட்டன என்றும் கனம் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் விளக்கம் தந்துள்ளார்.

தங்கள் கட்சித் தோழர்கள் சிலர்மீது தொடுக்கப்பட்டிருந்த நான்கு சதி வழக்குகளை வாபஸ் வாங்குவதின் மூலம், அந்தக் கட்சியிடம் ஆச்சாரியார் எதை எதிர்பார்த்தாரோ, அந்த நன்றி விசுவாசத்தை, கம்யூனிஸ்டு கட்சியிடமிருந்து அவர் மனங்குளிரப் பெற்றுவிட்டது—பெற்றுக்கொண்டும் வருகிறார். வாய்ப்பு நேரும்போதெல்லாம், ஆச்சாரியார் விரும்பினதையும், விரும்புவதையும், கம்யூனிஸ்டு கட்சி செய்யப் பின்வாங்குவதில்லை என்பது வெளிப்படை.

ஆச்சாரியாருக்குள்ள—'சமத்துவ நோக்கும், சமதர்மப் போக்கும், அரசியல் அறிவாற்றலும்'—காங்கிரஸ் கட்சியில் உள்ள மற்றவர்களிடம் மருந்துக்கும் கிடையாது என்று, கம்யூனிஸ்டு கட்சி அவரைப் பாராட்டுவதிலும் ஆச்சரியமொன்றுமில்லை.

அரசியல் கட்சிகள் மீது சர்க்கார் தொடுக்கிற சதி வழக்குகளுக்கெல்லாம், தக்க சாட்சியங்கள் உண்டு என்றோ, தொடுக்கப்படுகிற எல்லா வழக்குகளிலும் சர்க்காருக்கு இறுதியில் நூற்றுக்கு நூறு வெற்றி கிடைத்துவிடுகிறது என்றோ, எவரும் கூறத் துணியார்.

சர்க்கார் தொடுக்கும் வழக்குகளில் பெரும்பாலானவை ஒரு சர்க்காருக்குள்ள பழிவாங்கும் சுபாவத்தின் விளைவாகும். போலீசார் சொல்லிக் கொடுத்ததைக் கிளிப்பிள்ளை போல சொல்லும் சாட்சியங்களைச் சர்க்கார் சதிவழக்குகளில்தான் நாம் காணக்கூடும். எனவே, கம்யூனிஸ்ட் கட்சியாளர்மீது சுமத்திய நான்கு சதிவழக்குகளும் நீதிமன்றம் கண்டிருக்குமானால், ஆச்சாரியார் சர்க்காரின் கருணைக்கு இப்போது கிடைத்துள்ளது போன்ற விளம்பரம் கிடைக்காது போயிருந்தாலும், போயிருக்கலாம். நீதிமன்றத்தின் கடுமையான தாக்குதலைப் பெற்று, ஒரு சர்க்கார் தனது முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்ட சம்பவங்களும் ஏராளம்.

கம்யூனிஸ்டு கட்சியினரின் எதிர்ப்பைக் குறைத்துக் கொள்ள அமைச்சர் ஆச்சாரியார் செய்த சதியை, சிறந்த சலுகையாகக் கொண்டு, கைமேல் கிடைத்துள்ள கணிசமான பலனுக்காகக் கம்யூனிஸ்டு கட்சியினர் மகிழ்ச்சியடைவதை நாம் வரவேற்கிறோம். அவர்கள் சந்தோஷப்படுவதைக் கண்டு எவருக்கும் கோபம் ஏற்பட ஒரு துளியும் நியாயம் கிடையாது.

கம்யூனிஸ்டு கட்சியினர் மீது தொடுக்கப்பட்ட நான்கு சதிவழக்குகளையும் வாபஸ் வாங்கிக் கொண்டதில் நமக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. ஆனால், அவர் கூறும் காரணத்தைத்தான் நாம் ஆட்சேபிக்கிறோம்.

கம்யூனிஸ்டு கட்சியினர் மீது தொடுக்கப்பட்ட வழக்குகள், அந்தக் கட்சியினர் அப்பொழுது மேற்கொண்ட பலாத்கார நடவடிக்கைகளின் உருவலுகத் தொடுக்கப்பட்டவைகளாகும். அதற்குப் பிறகு, அந்தக் கட்சியினர் அமைதியான நடைமுறைக்குத் திரும்பி இருக்கிறார்கள் என்று பிரதமர் சொல்லுகிறார். பிறகு, மேற்கொண்ட அமைதியான போக்கைக் காட்டி, முன்னால் செய்த பலாத்காரத்துக்குக் கருணைகாட்ட முற்படுவதில் எந்தவித நியாயமும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. அதுவுமல்ல மேல் அமைதியான நடைமுறைகளில் அந்தக் கட்சியினருக்கு நம்பிக்கை ஏற்பட ஊக்கமூட்டவே, வழக்குகளை வாபஸ் வாங்கும் சலுகை காட்டப்பட்டதாக ஆச்சாரியார் கூறுவது கொஞ்சமும் பொருத்தமானதாகக் காணோம். நிற்க,

திருநெல்வேலி சதி வழக்கில் தண்டிக்கப்பட்ட பாலதண்டாயுதம் அவர்கள் சம்பந்தமாகவும் கேள்வி கேட்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பதில் கூறிய பிரதமர் ஆச்சாரியார், திருநெல்வேலி சதி வழக்கின் வரலாற்றை விளக்கமாகக் கூறியுள்ளார். சம்பந்தப்பட்டவர்களிடம் கருணை காட்டுவது சம்பந்தமாக, காலம் வரும்பொழுது சர்க்கார் அதைக் கவனிக்கும் என்றும், தம்மைப் பிரதமராகக் கொண்டுள்ள சர்க்கார், கல் நெஞ்சு சர்க்கார் அல்லவென்றும் ஆச்சாரியார் அருள் கூர்ந்துள்ளார்.

பிரதமர் ஆச்சாரியாருக்கும், அவருடைய காங்கிரஸ் சர்க்காருக்கும் இருப்பது கல் நெஞ்சா, அல்லது வெண்ணெய் நெஞ்சா என்பதைப் பிறகு ஆராய்வோம்.

அதற்கு முன்பாக, பாலதண்டாயுதம் அவர்களையும், ஆச்சாரியார் சர்க்கார் உடனடியாக விடுதலை செய்ய வேண்டியதே, ஆச்சாரியாருடைய முதற் கடமையாகும் என்பதை வற்புறுத்துகிறோம்.

கம்யூனிஸ்டு கட்சியினரின் இன்றைய போக்கைக் காட்டி, அன்றைய நடவடிக்கைக்காக தொடுக்கப்பட்ட நான்கு சதி வழக்குகளையும், இன்று ஆச்சாரியார் வாபஸ் வாங்கி இருக்கும்பொழுது, அதே நியாயத்தின்கீழ் பாலதண்டாயுதத்தின் வழக்கையும், வழக்கு நடக்கும் காலத்திலேயே ஆச்சாரியார் சர்க்கார் வாபஸ் பெற்றிருக்க வேண்டும். அதுதான் ஆச்சாரியார் கூற்றுப்படி நியாயமாகும். அப்பொழுதே வழக்கை வாபஸ் வாங்காமல் இருந்தது ஆச்சாரியாரைக் கண்டிக்கத் தக்கதாகும்.

அப்பொழுது, ஆச்சாரியார், முன்யோசனை இல்லாமல், திருநெல்வேலி சதி வழக்கை வாபஸ் வாங்காத பெருந் தவறுக்கு, கழுவாய் தேடிக்கொள்ளும் முறையிலாவது, உடனடியாக பாலதண்டாயுதத்தை விடுதலை செய்தாக வேண்டும். நிற்க,

தி. மு. கழக வழக்குகளை வாபஸ் பெறுவது பற்றியும் அதே தோழர் சலாம் கேட்டிருக்கிறார். வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று பலத்த கிளர்ச்சி நடப்பதையும் அவர் விளக்கிக் கேட்டுள்ளார். அதற்கு அமைச்சர் ஆச்சாரியார் கூறிய பதில், மாங்காயிலும் படாமல் தேங்காயிலும் படாமல் இருக்கிறது. அதாவது, 'எக்காரணங்களைக் கொண்டு சர்க்கார் சதி வழக்குகளை வாபஸ் பெற்றனர் என்று தெளிவுபடுத்தினேன். குற்றங்களைக் கவனிப்பதில் இவ்விதக் கிளர்ச்சிகளை சர்க்கார் கவனிக்க முடியாது,' என்று வழவழா, குழகுழாவாக ஆச்சாரியார் பதில் கொடுத்துள்ளார்!

"கொலைக் குற்றங்கள் சாட்டப்பட்ட சதி வழக்குகளை வாபஸ் வாங்கினாலும் வாங்குவேனே அல்லாமல், சாதாரண குற்றங்களைச் செய்ததாகச் சொல்லப்படும் சதிவழக்குகளை நான் வாபஸ்பெற மாட்டேன்" என்றுதான் ஆச்சாரியார் தரும் விளக்கம், எவருக்கும் பொருள்படும்.

காருண்யமிக்க ஆச்சாரியார் தொடுத்துள்ள தூத்துக்குடி சதிவழக்கை, ஆச்சாரியார் வாபஸ் பெறப்போகிறாரா இல்லையா என்கிற பிரச்னை ஒரு பக்கம் கிடக்கட்டும். பொதுச் செயலாளர் உள்ளிட்ட ஐந்து முக்கிய தி. மு. கழகத் தலைவர்களின் தண்டனையைக் கூட்ட வேண்டுமென்று, கல்நெஞ்சைக் கனவிலும் பெற்றிருக்காத ஆச்சாரியார் சர்க்கார் உயர்நீதி மன்றத்தில் மனு போட்டு இருக்கிறதே, அதை உடனடியாக வாபஸ் பெறுவதற்கு ஆச்சாரியார் சர்க்கார் முன்வரப் போகிறதா, இல்லையா என்பது தெரிந்தாக வேண்டும்.

கீழ்க் கோர்ட் தண்டனையைத் தலைவர்கள் அனுபவித்தாகிவிட்டது மேலும் அவர்களை ஆச்சாரியார் சர்க்கார் தண்டிக்கவேண்டுமென்பதற்கு தாம் கொண்டுள்ள உள்ளெண்ணம் என்னவென்பதையும், ஆச்சாரியார் உலகத்தவருக்கு அறிவித்தாக வேண்டும்.

தலைவர்களின் தண்டனையைக் கூட்டவேண்டுமென்று ஆச்சாரியார் உயர்நீதிமன்றத்துக்கு ஓடி இருப்பது சட்ட முறை, அரசியல் நாகரிகம், மனிதப் பண்பு அனைத்துக்கும் முரண்பட்டுக் கிடப்பதாகும். ஆச்சாரியார் சர்க்காருக்கு உள்ளது கல் நெஞ்சந்தான் என்பதை விளக்குவதோடு, உள்ள வெறுப்புத் துவேஷத்தையும், அதன் பலனாக எழும் பழி வாங்கும் குணக்கேட்டையும் விளக்குகின்றன என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இதோ, அமைச்சர் ஆச்சாரியாருடைய அறநெறிப் பண்பை விளக்கும் ஒன்றைக் குறிப்பிடுகிறோம். அது; இது:

"நீதிமன்றங்களிலெல்லாம் ஆச்சாரியாரின் ஆட்சியிலே, ஆச்சாரியாரின் பேயாட்சியிலே எத்தகைய நிலைமையில் இருக்கிறதென்பதைச் சொல்லுகிறேன்."

"இவருடைய மகன் நரசிம்மன் பார்லிமெண்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது சம்பந்தமாக, அவருடைய தேர்தல் வழக்கை விசாரிக்க சேலம் நீதிபதியாக இருந்த நடராச நாடாரை சேர்மனாகக் கொண்ட ஒரு டிரிபியூனலை சென்ற அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. நடராசநாடார் தலைவராகவும், விசுவநாதய்யர், ராமகிருஷ்ண அய்யர் ஆகியோர் டிரிபியூனல் அங்கத்தினர்களாகவும் இருந்தார்கள். அந்த மூவரில் ஒருவராகிய நடராசநாடார் ரிடையர் ஆவதற்கு 7 மாதத்திற்கு முன்னால் அவரை சேலத்திலிருந்து தென் கன்னட மாவட்டத்திற்கு, 'புட்பால்' அடிப்பது போல்—500 மைல்களுக்கப்பால் மாற்றிவிட்டார். அங்கிருந்தவரை மிரட்டினார்."

"சேர்மன் ஷிப்பை ராஜினாமா செய்; உங்களுக்கு வேண்டியதெல்லாம் தருகிறேன்." என்று சொன்னார். இதை மறுக்கமுடியாத சவாலாகக் கூறுகிறேன்."

"ராஜினாமாவை வாங்கினார், வாங்கிவிட்டு அந்த இடத்தில் ஒருவரை நியமித்தார். யாரை? அனந்தநாராயண அய்யர் என்பவரை போட்டுக்கொண்டார். தன்னுடைய மகனுக்காக எதை வேண்டுமானாலும் செய்கிறேன் என்று நீதியிலேயே தலையிடவும் செய்கிறார். ரிடையர் ஆவதற்கு 7 மாதமே இருக்கும் ஒருவரை 500 மைலுக்கப்பால் மாற்றுதல் செய்திருக்கின்றார் என்றால், இது அடுக்குமா? இன்றிருக்கிற உயர்நீதி மன்றம் ஆட்சேபணை தெரிவித்தது. அதையும் பொருட்படுத்தாமல் மிரட்டல் பண்ணி ராஜினாமா வாங்கினார்."

'மேரிகை': 28-12-53

இப்படி வெளிப்படையாக, சட்ட சபையில், தோழர் ஜோசப்ராம் அவர்கள் அமைச்சர் ஆச்சாரியார்மீது குற்றம் சாட்டியிருக்கிறார். இது, இன்றுவரை மறுக்கப்படவில்லை.

எனவே, ஆச்சாரியாருக்கு உள்ளது 'கற்பாறை' நெஞ்சு மட்டுமல்ல; அவரே ஒப்புக் கொண்டுள்ளது போல், 'சுயஜாதி வெறி'யும், 'பழி வாங்கும் குண'முமேயாகும்.

கோழிக்கோடு கூட்டத்தில் ஆச்சாரியார் பேசும்போது, 'நான் ஒரு கல் நெஞ்சன்' என்று கூறியிருப்பது, நமது குற்றச்சாட்டுக்கு உரமூட்டுவதாகும்.

மதுவிலக்கு ஆய்வுக் குழு

லட்சுமணபுரி, டிச. 31—

உத்தரப் பிரதேசத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தடுக்க, குடிக்காமல் இருக்க முடியாது என்றிருக்கும் குடிகாரர்களுக்கு, குடிச்சப் பெர்மிட்டும், அவர்களுக்கு விசேஷமான கள்ளுக் கடைகளையும் ஏற்படுத்தலாமா என்று உத்தரப் பிரதேச சர்க்கார் யோசித்து வருவதாகத் தெரிகிறது.

இவ்விஷயமாக இலாகா கமிட்டி போன்று பரிசீலனை செய்து வருகிறது.

இடைக் கமிஷன், மதுவிலக்கை சிறப்பாக அமுல் நடத்தும்படி கூறியது, அனுபவசாத்தியமற்றதென்று இங்கு கருதப்படுகிறது.

அரிசி அதிகரிப்பால் நெருக்கடி

மார்க்கெட்டுகள் கிடைக்காததால் பர்மாவின் சங்கடம்

ரங்கூன், டிச. 30—

பர்மாவில், அரிசியில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது; இதற்குக் காரணம், அரிசிக்கான போதிய மார்க்கெட்டுகள் கிடைக்காதது தான்.

பர்மாவிடம் அரிசி சேமிப்பு அதிகமிருக்கிறது; ஆனால் பர்மா அரிசிக்கு வாங்குவதற்குத் தான் ஆட்கள் கிடைக்கவில்லை

இந்தச் சேமிப்புகுவிந்ததற்குக் காரணம், இந்தியா சென்ற ஆண்டு வாங்க உத்தேசித்திருந்த கோட்டாவை வாங்காததுதான்!

யுத்தத்திற்கு முன்பு, பர்மா, 36,00,000 டன் அரிசியை ஏற்றுமதிக்காக ஒதுக்கியிருந்தது. ஜப்பானும், இந்தியாவும்தான் பர்மா அரிசியை அதிகமாக வாங்கிவந்தார்கள்!

மதுவிலிருந்து — ரப்பர்!

பெர்லின், டிச. 31—

பிரெஞ்சு கெப்பு ஒயினிலிருந்து செயற்கை ரப்பரைத் தயாரிக்க முடியும் என்பதை, ஜெர்மன் ரசாயன உற்பத்திக் கம்பெனி ஒன்று கண்டுபிடித்திருக்கிறது. 1,25,00,000 காலன் ஆல்கஹால் ஒயினிலிருந்து 30,000 டன் செயற்கை ரப்பர் தயாரிக்க முடிகிறதாம்.

நதியின் கோபத்திலிருந்து நகரை காக்க முயற்சி

லட்சுமணபுரி, டிச. 31—

வைகுந்த் செகவுக்குப் பேர் போன நகரை, காக்ரா நதியின் [illegible] உள்ளாகி மூழ்கி [illegible] தடுப்பதில், உத்தரப் பிரதேச சர்க்கார் கவனம் செலுத்தி வருகிறது.

இப்போதே கரைகள் உடையும் நிலையில் மூழ்க ஆரம்பித்துவிட்டது. நதி, இப்படி தன் போக்கை மாற்றாமல் இருக்க பலமான அணைபோட திட்டமிடப்பட்டிருக்கிறது.

One side of the page is dark

தூத்துக்குடி சதி வழக்கு:

"இருவருக்கும் இருந்தது சொற்பமான காயந்தான்"

'சப்-இன்ஸ்பெக்டர் கோரிக்கைக்கிணங்கவே அதற்கு 'சர்டிபிகேட்' கொடுத்தேன்"

23—12—53ல், தூத்துக்குடி கலவர வழக்கில், பிராசிகியூஷன் தரப்பில், மற்றும் 6 சாட்சிகளை ஸ்பெஷல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு எஸ். புரிகர அய்யர் விசாரித்தார்.

44-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட டாக்டர் சவரிராஜ் கூறியதாவது:

நான் தற்போது மிடையரான ரயில்வே டாக்டர்; சென்ற ஜூலை 15-ந் தேதி, நான் தூத்துக்குடி ரயில்வே ஆஸ்பத்திரியிலிருந்தேன்; நான், ஜாகப் என்ற ரயில்வே போர்ட்டரை அன்று பரிசோதித்துப் பார்த்தேன்; அவரது முகத்தில் வலது பக்கத்தில் ஒரு சிராய்ப்பு காயமிருக்கக் கண்டேன்: ரயில்வே கேட் கீப்பர் அந்தோணிசாமியின் வலது பொட்டில் ரத்தம் கட்டிப் போயிருந்ததைப் பார்த்தேன்; அன்று காலை 9 மணிக்கு நடந்த கல்வீச்சால் அந்தக் காயங்கள் ஏற்பட்டதாக அவர்கள் என்னிடம் கூறினர்;

ஆனல், இருவருக்கும் சொற்ப காயமிருந்தது; பிறகு ரயில்வே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் என்னை இந்த நபர்களுக்கு காய சர்டிபிகேட் எழுதிக் கொடுக்கும்படி வேண்டியதின் மேல், நான், இங்கு 28-வது அத்தாட்சியாக வைக்கப்பட்டிருக்கும் சர்டிபிகேட்டை 2 பேருக்கும் கொடுத்தேன்."

அடுத்தபடியாக 45-வது சாட்சியாக தூத்துக்குடி ரயில்வே ஸ்டேஷன் சூப்பரிண்டு கான் பகதூர் ஜி ஐ குரோஷி, பின் வருமாறு கூறினர்:

"நான் தூத்துக்குடி ரயில்வே ஸ்டேஷன் சூப்பரின்டென்டு; மேலூர் ரயில்வே ஸ்டேஷன் என் கண்ட்ரோலுக்குட்பட்டது; ஜூலை 15-ந் தேதி காலை 6-25 மணிக்கு 740 நெ. கோவை பாசஞ்சர் தூத்துக்குடியை விட்டுப் புறப்பட்டபோது, தி. மு கழகத் தொண்டர்கள், சர்க்காருக்கு விரோதமான கோஷங்களை ரயில் வண்டியின் பெட்டிக்குள்ளிருந்து கோஷிப்பதைக் கேட்டேன்; அன்று தொல்லை ஏற்படுமென எதிர்பார்த்ததால், நானும், என்ஜினுக்கு அடுத்த பெட்டியில் பிரயாணம் செய்தேன்; முதலில் ஸ்டேஷனுக்கு 50 முதல் 75 கெஜ தூரத்தில் வண்டி போய் நின்றது. பிறகு, அது, 100 கெஜ தூரம் இடைவிட்டுவிட்டு 3 இடங்களில் நின்றது; போலீஸ்காரர், அச் சமயங்களில் சிலரைக் கைது செய்தனர்; காலை 7-30 மணிக்கு நான மேலூர் ரயில்வே பிளாட்பாரத்தில் இருந்தேன்; என்ஜின் முன், இருப்புப்பாதையில், 2,000 பேர் உட்கார்ந்திருந்தனர்; இருமருங்கிலும் 2,000 பேர் கொண்ட கூட்டம் இருந்தது; நான் போர்ட்டர் ஜாகெப்புடன் ஸ்தலத்திற்குப் போனேன்; அங்கு கலெக்டர் வந்தார்; அவர், போலீஸ் ஆபீசர்களுடன் பேசி கூட்டத்தை கலைந்து போகும்படி கேட்டார்; போலீசார் தண்டவாளத்தின் மீது உட்கார்ந்திருந்தவர்களைத் தடி கொண்டு கலைத்தனர்; அப்போது, இரு புறத்திலுமிருந்த ஜனக் கூட்டம் கற்களை வீசியது; ஸ்டேஷன் கட்டடத்திற்குப் பின்புறமிருந்து சத்தம் கேட்டது; நான் ஸ்டேஷனுக்குள் சென்றேன்; ஸ்டேஷனுக்குள்ளிருக்கையில் துப்பாக்கிப் பிரயோகச் சப்தம் கேட்டது; மீளவிட்டானுக்கும் — தூத்துக்குடிக்கும் இடையில் உள்ள ரயில்வே பாலத்திற்குத் தீ வைக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டதும் ரயில்வே போலீசுக்குப் புகார் அனுப்பினேன்."

திரு தங்கசாமியின் குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:

"நான் எந்த ராஜீய கட்சியையும் சேர்ந்தவனில்லை; நான் தி. மு கழக கூட்டமெதற்கும் ஒரு போதும் போனதில்லை;

தடியடிப் பிரயோகத்திற்குப் பிறகு கற்கள் எறியப்படுவதைப் பார்த்தேன்; இருப்புப்பாதையில் இருந்த சிலர் படுத்திருந்தனர்; உட்கார்ந்திருந்தவர்கள் எவரும் கல்லெறியவில்லை; அவர்கள் பலாத்காரச் செயல் எதுவும் செய்யவில்லை; உட்கார்ந்திருந்தவர்களுக்கு மேற்கே கூட்டமெதுவுமில்லை; மறுநாள் முற்பகலில் என்னை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரித்தார்."

பிராசிகியூஷன் தரப்பில் 46-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட போர்ட்டர் ஜாகப்பும், 47-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட ரயில்வே கேட்கீப்பர் அந்தோணிசாமியும் கூறியதாவது:—

"எங்களுக்குக் கல்வீச்சால் காயங்கள் ஏற்பட்டன?"

48-வது சாட்சி கருப்பசாமி பண்ணையார் (தையல் கடைக்காரர்) கூறியதாவது:—

"வக்கீல் கணேச ஐயர் ஆபீஸ் போர்டு பலகையை 87-வது எதிரி தடியால் அடித்து உடைத்தார்."

குறுக்குவிசாரணையில் கூறியதாவது:—

"எனக்கும், 87-வது எதிரிக்கும், புட்பால் மாட்சிற்கு டிக்கெட் விற்றது சம்பந்தமாக சச்சரவு கிடையாது."

49-வது சாட்சியான கிருஷ்ண ஆச்சாரி கூறியதாவது:—

"15-ந் தேதி என் கடையில் வேலை செய்கையில்: 15 பேர் தடிகள் சகிதம் கோஷித்துக் கொண்டு வந்தனர்; கடையை மூடும்படி கேட்ட நபர் 46-வது எதிரி ஷண்முகக் கனி நாடார், அவர் கூட்டத்திலிருந்ததைப் பார்த்தேன். கூட்டங்கள் போன பிறகு நான் கடையை மூடிக் கொண்டு வீடு சென்றேன்."

சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சங்கரநயினர் கோயிலில் பொதுக்கூட்டம்

25—12—53-ல், இவ்வூர் பன்னீர் செல்வம் திடலில், தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆ. திராவிட மணி, தோழியர் அருண்மொழி, பி ஓ எஸ். ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தூத்துக்குடி வழக்கு நிதிக்கு உண்டியல் மூலம் வசூலான ரூ 6—12—0-ம் தோழியர் அருண்மொழி வசம் தரப்பட்டது.

* * *

புளியங்குடியில் பொதுக்கூட்டம்

26—12—53-ல், தோழர் பி. எ கங்காதரன் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள்: டி. ஆர். சுப்பிரமணியம், ஆ. திராவிடமணி, தோழியர் அருண்மொழி ஆகியோர், தற்கால அரசியல் நிலைமை குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—திராவிடர் திருநாளில்

★

சென்னையில் நடக்கவிருக்கும் திராவிடர் திருநாளில், ஜூலை மாத அறப்போரில் கலந்து சிறை புகுந்த சென்னைத் தோழர்கள் அனைவரையும், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களுடன் புகைப்படம் எடுக்க ஏற்பாடாகியுள்ளது. எனவே, சிறைபுகுந்த சென்னைத் தோழர்கள் அனைவரும், தங்களின் முகவரிகளையும், சிறைவாச நாட்குறிப்பையும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி, தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

சிறுவர்—சிறுமியர் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வோர், 12 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல்வேண்டும்; 'பொங்கல் விழா' தலைப்பில் மூன்று நிமிடத்திற்குள் பேசி முடிய வேண்டும்; போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் ஜனவரி 10-ந் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரிவித்துக்கொள்ள வேண்டும்:-

கே எம். கண்ணபிரான், செயலாளர், தி. மு. கழகம், இராயபுரம், சென்னை-13.

ஆண்டு நிறைவு விழாவும் பொங்கல் புது நாளும்

★

சென்னை, முத்தியாலுப் பேட்டை, தி. மு. கழக மூன்றும் ஆண்டு நிறைவு விழாவும், பொங்கற் புது நாள் விழாவும், 13—1—54 புதன் மாலை 5 மணிக்கு, சென்னை, லிங்கி செட்டித் தெரு, மல்லீஸ்வரர் கோவில் முன்பு, தோழர் ம. சு. சம்பந்தம் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள்: இரா நெடுஞ்செழியன். என். வி நடராசன், காஞ்சி. கல்யாணசுந்தரம், வி. எஸ். கோவிந்தராசன், முகவை பாண்டியன், காஞ்சி மணிமொழியார் ஆகியோர் பேசுவர்.

தோழர்கள் நெடுஞ்செழியன், என் வி. நடராசன் இருவருக்கும் வரவேற்பு இதழ் அளிக்கப்படும்.

தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அறிக்கை

★

"நாகை தி. மு. கழகச் செயற்குழுவைத் திருத்தியமைப்பதற்காக பொது உறுப்பினர்கள் கூட்டம், 3-1-54 ஞாயிறு மாலை, நாகை, நீலாமேல வீதி, வசந்தா சோடா பாக்டரியில், தோழர் கே. கே. நீலமேகம் தலைமையில் நடைபெறும் உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கருதி, கூட்டத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்," என, தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அறிவிக்கிறார்.

அழகிரி நினைவுப் படிப்பகம்

மதுரை, டிச. 30—

26—12—53-ல், மதுரை, கீழ மாசி வீதி, திராவிடமறுமலர்ச்சி மன்றம், அழகிரி நினைவுப் படிப்பக செயற் குழுக் கூட்டம் தோழர் சொ. முனியாண்டி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள்: வி அன்பழகன் செயலாளராகவும், வே. மாணிக்கம் விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், பல முக்கிய விஷயங்கள் குறித்து முடிவு செய்யப்பட்டன.

சேலத்தில் தோழர் சம்பத்

மக்களின் மாபெரும் வரவேற்பு

சேலம், டிச. 31—

27—12—53 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு சேலம் நகர தி. மு கழக சார்பில் மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. தாய்மார்கள் உள்பட இருபதாயிரம் பேர் கூடியிருந்தனர். கூட்டத்திற்கு தோழர் வி. சிவப்பிரகாசம் தலைமை வகித்தார். சேலம் மாவட்ட தி. மு க. செயலாளர் ஜி பி. சோமசுந்தரம் உள்பட ஏராளமான தோழர்கள், கிளைக் கழகங்கள், மாணவர் கழகங்கள் சார்பில் தோழர் சம்பத் அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நகர தி மு. கழக செயலாளர் ஈ ஆர். கிருஷ்ணன், ஈரோடு எஸ். அப்பாவு, தோழர் ஜி. பி. சோமசுந்தரம் ஆகியோர் தோழர் சம்பத் அவர்களைப் பாராட்டியும், தி. மு கழகத்தின் கொள்கைகள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தோழர் சம்பத் அவர்கள், தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்தும், தி. மு. கழகத்தின் போராட்டங்கள், நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்றது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில் தோழர் சம்பத் அவர்களிடம் தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக ரூ. 13—8—0 பல தோழர்களால் கொடுக்கப்பட்டது. உண்டியல் மூலம் ரூ 36—4—6 மேற்படி நிதிக்காக வசூலாயிற்று.

★

அரூரில் தோழர் சம்பத்

28-12-53ல் தோழர் சம்பத் அவர்கள் காலை சென்ற முன்னர் சேலம் மாவட்ட தி. மு கழகப் பிரதிநிதி தோழர் எம் பரசுராமன் அவர்கள் பெயரால், 'பஜனைக் கோயில் தெரு' என்றிருந்ததை, 'பரசுராமன் தெரு' என்று பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்

• • •

தி. மு. கழகத் துவக்கம்

மாலை 3 மணிக்கு அரூர் அருகேயுள்ள சின்னக்குப்பம் என்ற சிற்றூரில் தோழர் சம்பத் அவர்கள் தி. மு கழகக் கிளை துவக்கவிழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். அவ்விழாவில் தோழர்கள் எஸ் அப்பாவு, சிவப்பிரகாசம், பழனிச்சாமி ஆகியோர் தி மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்கள்.

* * *

பொதுக் கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு தோழர் சென்றயன் அவர்கள் தலைமையில், அரூர் பெரியார் திடலில், தி மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் எச் எல். முருகேசன், எஸ். அப்பாவு, சிவப்பிரகாசம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாக தோழர் சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

விளாத்திகுளம் தி. மு. கழகம்

27—12—53-ல், தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எஸ். வி. காந்தன் தலைமையில் நடைபெற்றபோது, இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் பூ. பூலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருப்பாப்புலியூர் தி. மு. கழகம்

20—12—53 காலை 9 மணிக்கு தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில், நிறைவு விழா நடைபெற்றது. தோழர் வாணிதாசன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர்கள்: கே. வி. சாமிநாதன் திராவிட நாடு படத்தையும், சித்தார்த்தன் அண்ணாதுரை படத்தையும் திறந்து வைத்தனர். தோழர்கள்: சீனுவாசன், சி. என். தம்பித்துரை, புலவை வாணன், ஆர். சுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

காசிப்பட்டணத்தில் தி. மு. கழகத் துவக்கம்

20—12—53ல், இவ்வூர் கடை மைதானத்தில், தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம். தோழர் க. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. என். முத்து கழகக் கொடியை ஏற்றுவித்தார். தோழர்கள் க. தங்கம், ஏ. என். முத்து, க. ஆறுமுகம், இரா. பாண்டியன், கோவை எழிலரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சேவூர் தி. மு. கழகம்

24—12—53ல் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தோழர் கருணாநிதிக்கு, 23—1—54ல், வரவேற்பு அளிக்கவும், அச்சமயம், தூத்துக்குடி வழக்கு நிதியை அவரிடமே அளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மறுமலர்ச்சி மன்றம்

மஞ்சை நகர், டிச. 28—

இம்மன்றத்தின் உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் கோபால் செயலாளராகவும், ஜெயப்பிரியன் துணைச் செயலாளராகவும், இரங்கராசன் பொருளாளராகவும், முனுசாமி விளம்பர உறுப்பினராகவும், தெய்வநாயகம் பொறுப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருமணங்கள்

புதுவயலில் (காரைக்குடி) தி. மு. க. இயக்கத் தோழர் முகம்மது சரீபுக்கும், ஆமினாபேகத்திற்கும் நடைபெற்ற திருமணத்தின் பொருட்டு 20—12—53ல், மீனாட்சிபுரத்தில் தோழர் இராம—சுப்பையா தலைமையில் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. தோழர்கள்: சோமசுந்தரம், பால்மன்னன், இரத்தினவேலு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இயக்கத் தோழர்கள் மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கினர். மணமக்கள், திருமண விழாவின் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளித்தனர் — வரப்பெற்றோம் — நன்றியுடையது-பொறுப்பாளர்.

* * *

தோழர் சுந்தரராசுக்கும், தோழியர் மருட்செல்விக்கும் 9—12—53 அன்று சிவகாசியில் நடைபெற்ற வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது-பொறுப்பாளர்.

அனுதாபம்

25—12—53ல், நாசரேத் தி. மு. கழக நிர்வாகக் கமிட்டி கூட்டம் தோழர் பி. எஸ். கே. ஜெயபால் தலைமையில் கூடி, ரயில் நிறுத்தப் போரில் சிறை சென்று மீண்ட தோழர் எம். ஆர். அந்தோணி அகால மரணமடைந்ததை யொட்டி, அன்னார் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தாம் குட்டிச்சுவரானாலும், நாட்டைக் குட்டிச்சுவராக்கியே தீருவதெனச் சி. ஆர். கொக்கரிப்பு!

—(:)—

மனதுக்குகந்த சுயஜாதி அம்மையாரை கல்வி அமைச்சராக்க ஆச்சாரியார் பேராசை!

—(:)—

மதுவைப் பங்கிட்டுப் பரிமாற பிரதமர் தயாராகிறார்!

—:X:—

ஆசிரியர் சம்பளத்தை உயர்த்தினால் 'எதிர்ப்பாளர்' எதிர்ப்பர் எனப் பொய்யுரை!

—(:)—

விற்பனை வரியை எதிர்க்கும் வியாபாரிகள் மீது நாலு கால் பாய்ச்சல்!

மேல்சபையில் சி. ஆர். லண்டத்தனம்

சென்னை, ஜன. 1—

"கல்வித் திட்டம் குறித்து ஓமந்தூர் ரெட்டியார் பேசினார். அதில் எப்படியோ வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டுவிட்டபடியால் சர்க்கார் அதைக் கைவிட்டு விடக் கூடாதா என்று அவர் கேட்டார். இந்த சர்க்கார் நீடிக்க வேண்டுமென்ற ஆசையால் திட்டத்திற்கான எதிர்ப்பைக் கருதி அதைக் கைவிடலாமே என்று அவர் சொன்னார்"

"அவர் சொன்னது சரியாகவும் இருக்கலாம். ஆனால் எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லையே! பலத்த எதிர்ப்பு இல்லாமல் எந்த நல்ல திட்டத்தைக் கொண்டுவர முடியும்?"

"சர்க்கார்கள் நிரந்தரமானவையல்ல; நல்ல யோசனைகளும் எப்போதும் தோன்றும். நல்ல விஷயங்களில் எதிர்ப்பைப் பாராட்டக்கூடாது. அதைச் சமாளித்துத்தான் ஆக வேண்டும். எவ்வளவோ விஷயங்களில் சென்னை முன் நிற்கிறது. நம் மக்களுக்கு மூளை அதிகம். ஒரே ஒரு குறைபாடுதானிருக்கிறது. நமது துரதிருஷ்டம் வகுப்பு உணர்ச்சி ஓங்கி நிற்கிறது. இது தவிர்க்க முடியாததே. இந்தக் கல்வித் திட்டம் எல்லோருக்கும் நல்லதே. சிறுவர்களுக்கு மூன்று மணி நேரம் சிறை வைத்தால் போதும். பள்ளிக்கூடமில்லாத நேரத்தில் கிராமப்புறங்களில் சுற்றினால் என்ன தவறு? ஓழிந்த நேரத்தில் பெற்றோர்களுக்கு உதவி செய்வது நல்லதுதானே."

"ராமசாமி ரெட்டியார் எனக்கு புத்தி கூறினார், வீண் தொந்தரவும் ஏன் என்றார். இது என் தலைவிதி. இதில் நான் வெற்றியடையாவிடில் வேறு யாராவது நிச்சயம் வெற்றி யடைவார்கள்."

"மத்திய ஆரம்பக் கல்விக் குழு திட்டத்தை அங்கீகரித்திருக்கிறது. போர்டு இம்மாதம் பரிசிலனைக்கு வரும். நான் இத் திட்டத்தினால் தேசத்திற்கு அழிவு உண்டாக்குவதாகச் சிலர் சொல்கிறார்கள். அப்படி நான் ஒருநாளும் செய்யமாட்டேன். ஒருசமயம் என் அழிவை நானே தேடிக் கொள்ளலாம்"

—இவ்வாறு, ஆச்சாரியார், நேற்றைய மேல் சபைக் கூட்டத்தில் கல்வித் திட்டம் குறித்து ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் சொன்னவைகளுக்குப் பதிலளிக்கும் போது குறிப்பிட்டார்:

மேலும் அவர் உறுப்பினர்களுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:

'சம்பளம் உயர்த்தினால் எதிர்ப்புக் கிளம்பும்'

ஆசிரியர்கள் அதிகப்படி ஒரு மணி நேரம் வேலை செய்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. எல்லோருக்கும் இப்போது தொழிற் சங்க மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. திட்டம் போட்டு அதற்கு எதிர்ப்பு இருக்கும் போது காரணமின்றி எதிர்ப்போருக்கு இது ஒரு காரணமாகிவிடும். ஆசிரியர் சம்பள உயர்வு தானாக தக்க சமயத்தில் வரும். இந்தக் கல்வித்திட்டம் குறித்து நான் அதிகம் கூற விரும்பவில்லை."

'ஜாதி வெறி'யரின் சமாதானம்

"பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வேலையிலும் வகுப்பு வாதத்தையே புகுத்த முயற்சி நடைபெறுகிறது. அதில் பிற்பட்ட வகுப்பினர் இடம் பெற்றிருக்கின்றனர். பப்ளிக் சர்வீஸ் கமிஷனே அரசியல் போட்டிகளுக்கு [illegible] படக் கூடாது என்பது என் ஆசை."

மனதுக்குகந்தவரை மந்திரியாக்க 'ஆச்சாரம்'!

"குடிப் பழக்கத்தினால் அதிகமாக அவதிப்படுகிறவர்கள் பெண்கள்தான். அத் தீமை ஒழிய வேண்டுமென அவர்களுக்குத்தான் ஆசை அதிகம். அதனால்தான் பெண்ணை மதுவிலக்கு அமைச்சராக்கினேன். இதுபோலவே கல்வி இலாகா பொறுப்பும் ஒரு பெண்மணியிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்பது என் கருத்து. அவர் திறமையுடையவராகவும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அப்படி ஒருவர் கிடைத்துவிட்டால் கல்வி இலாகாவை சுப்ரமணியத்திடமிருந்து எடுத்து அவரிடம் ஒப்படைக்கத் தவற மாட்டேன்."

மது பங்கீடுக்கு வரவேற்பு

"மதுபானங்களை 'ரேஷன்' செய்வது குறித்து நிறைய கருத்து வேறுபாடிருக்கிறது. இதில் 'ரேஷன்' முறை சாத்தியம் என்று யாராவது திருப்திப்படுத்தினால் அதை நானும் விரும்பிக் கவனிப்பேன். 'ரேஷன்' முறையால் மக்கள் குடிப் பழக்கத்தைக் குறைத்து இறுதியில் அறவே ஒழிக்க முடியுமென்று நிரூபித்தால் அப்படிப்பட்ட முறையை நான் வரவேற்கத் தயார்."

'விற்பனை வரியை விட முடியாது!'

"வருமான வரி, நிலவரி இவைகளின் பங்கு மிகக் குறைவு. அதைக் கொண்டு விற்பனை வரியை விட முடியாது. இது அவசியம் எனினும் எல்லாம் வாங்கும் மக்கள்மீது மாறாப்பற்கிறது. பத்திரிகைகள் தங்கள்மீது மட்டிய சர்க்கார்தான் வரி விதிக்கலாமென செய்து கொண்டு விட்டன. அது பத்திரிகைச் சக்தி. மோட்டார் வரி பற்றி புகார் கூறப்படுகிறது, அது நீண்ட காலமாகவே இருந்து வருகிறது."

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

1—1—54 வெள்ளி மாலை

திருவல்லிக்கேணி பாண்டியன் படிப்பக ஆண்டு விழா

இடம்:

திருவல்லிக்கேணி கடற்கரை

தலைவர்: என். வி. நடராசன்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
என். எஸ். இராஜேந்திரன்

★

வட சென்னை

கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பகம் முதல் ஆண்டு விழா

3—1—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு

இடம்:

வடசென்னை, பாண்டியன் திடல் (கல்லறை மைதானம்)

தலைவர்:

காஞ்சி—கல்யாணசுந்தரம்

பேசுவோர்:

மு. கருணாநிதி
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
முகவை ஆர். எஸ். பாண்டியன்

★

புங்கவாடி

2—1—54 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு

தி. மு. கழகம் திறக்கப்படும்

தலைவர்: இரா. மதியழகன்

திறப்பாளர்: எம். பி. சுப்ரமணியம்

கொடியேற்றுபவர்:

என். கே. இராசு

பேசுவோர்:

ஆ. சே. அன்பழகன்
கே. சி. அய்யாக்கண்ணு

★

இராசிபுரம்

3—1—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

இடம்: புதுசந்தைப்பேட்டை

தலைவர்: ஜி. பி. சோமசுந்தரம்

பேசுவோர்:

தோழியர் அருண்மொழி
" பூங்கோதை

"மக்கள் பிரதிநிதிகள் — சர்க்கார் அதிகாரிகள் இடையே மனக்கிலேசம் கூடாது"

ஆரூர் நகராட்சி மன்ற வரவேற்பில் ஈ. வெ. கி. சம்பத்

ஆரூர், டிச. 31—

"நகராட்சி மன்றங்கள் சரிவர இயங்கவும், உறுப்பினர்களிடையே வேற்றுமை மனப்பான்மை நிலவினாலும், ஊரின் பொதுக் காரியங்கள் தடையுறாமல் நடைபெற, கமிஷனர்களை, நீதிக் கட்சியினர் நியமித்தனர்; தற்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுய ஆட்சி மன்றங்கள் பலவற்றில் சர்க்காரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் இடையே மனக்கசப்பு நிலவுகிறது; சர்க்கார் அதிகாரிகளும் உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் பணியாற்றினால்தான், மக்கள், அதிக நலனை அடைய முடியும்,"

என்று, ஆரூர் வாலிபர் கழக வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், தோழர் ஈ. வெ. கி சம்பத் அவர்கள் குறிப்பிட்டார்.

28—12—53 திங்கள் காலை 11 மணிக்கு ஆரூர் வாலிபர் கழகச் சார்பில் தோழர் சம்பத் அவர்களுக்கு வரவேற்பு நிகழ்ச்சி ஒன்று வரவேற்பளிக்கப்பட்டது. தோழர் சம்பத் அவர்கள், ஆரூர் கூட்டுறவுக் கழக அலுவலகத்திலிருந்து வாலிபர் கழக அலுவலகத்திற்கு பாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலத்தில், வாலிபர் கழகத் தலைவர் என். கோவிந்தன், ஆர் முத்து, எச். ஆர். குன்னப்பன், எச். எம். சிவா, எ. சுந்தரம், வேதகிரி, எச். எல். முருகேசன் உள்ளிட்ட நகரப் பிரமுகர்களும் பொதுமக்களும் ஏராளமாகக் கலந்து கொண்டனர்.

வாலிபர் கழக அலுவலகத்தில், எக்ஸிகியூடிவ் அதிகாரி தோழர் சிங்காரம் உட்பட வாலிபர் கழக உறுப்பினர்கள், தோழர் சம்பத் அவர்களை வரவேற்றனர். கழகத் தலைவர் என். கோவிந்தன் அவர்கள் வரவேற்பிதழை வாசித்தளித்தார்.

தோழர் சம்பத் அவர்கள், அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினார்.

காங்கிரஸ் கட்சியின் உட்பகை உரம் பெறுகிறது!

கட்சியின் தலைமையை மாற்ற உறுப்பினர் வேண்டுகோள்

செகந்திராபாத், டிச. 31—

ஐதராபாத் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களில் மன வேறுபாடு பெற்றுள்ள 25 உறுப்பினர்கள், அங்கு காங்கிரசிற்குள் ஏற்பட்டுள்ள சச்சரவைத் தீர்ப்பதற்கு யோசனைகளைக் கூறி, மனு ஒன்றை நேருவிற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவரை உடனடியாக மாற்றுவதின் மூலம்தான், அதிகாரத்தில் உள்ள காங்கிரஸ் சர்க்காரை பலமுள்ளதாக ஆக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

காங்கிரஸ் உட்பகை ஒழுங்கு படுத்துவதற்காகக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பல்வந்தராய் மேத்தா ஐதராபாத் வந்திருக்கிறார் அங்கு 7-ம் தேதி வரவிருக்கும் நேருவின் வருகைக்காக அவர் காத்துக்கொண்டு இருக்கிறார்.

அவர் வந்திருக்கும்பொழுதே, அவருக்கும் தெரியாமல், மன வேறுபாடுடைய காங்கிரசார் நேருவுக்கு மனு அனுப்பியிருப்பது அவருக்கே ஆச்சரியமாக இருக்கிறதாம்.

கட்சிக்குள் ஏற்படும் குழப்பத்திற்கு எந்தவிட முடிவையும் காங்கிரஸ் தலைமை திணிக்காது என்றும், தக்க [illegible] முடிவிற்கு வர உதவி காட்டுவதோடு நின்றுவிடும் என்றும் பல்வந்தராய், நிருபர்களிடம் கூறினார்.

43-வது வட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு

★

"3—1—54 ஞாயிறு மாலை 5 மணிக்கு 43-வது வட்ட தி. மு. கழகத்தின் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். கம் கழகத் தோழர்கள் இதனையே அழைப்பாக ஏற்று கருமபடி கேட்டுக் கொள்கிறேன்" என்று, செயலாளர் புரட்சிமணி அறிவிக்கிறார்.

துணி கட்டுப்பாடு

புதிய கட்டளை

செகந்தி., டிச. 31—

சென்னை துணி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு என்ற புதிய உத்தரவை, நேற்று சர்க்கார் பிரசுரித்துள்ளனர். இது இந்த மாநிலம் முழுவதிலும் உடனடியாக அமுலுக்கு வருகிறது. இதன் மூலம் 1948-ம் ஆண்டு துணிக் கட்டுப்பாடு ரத்து செய்யப்படுகிறது.

இந்த உத்தரவின்படி அனுமதியின்றி துணி விற்கவோ சேமித்து வைக்கவோ முடியாது.

சந்திரமண்டல பாலம்: போட்டோ எடுக்க முயற்சி!

லண்டன், டிச. 30—

சந்திரமண்டலத்தில் இயற்கையாகவே ஒரு பாலம் இருக்கிறதென்று கண்டுபிடித்துள்ள டாக்டர் எச். பெர்ஸி விகின்ஸ், அந்தப் பாலத்தைப் போட்டோ எடுக்க முயற்சி செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார். இப்பாலம் $2\frac{1}{2}$ மைல் நீளமும், $1\frac{1}{2}$ மைல் அகலமும் கொண்டதாக இருக்கிறதாம்!

திராவிட முன்னேற்றக் கழகத் தக்கலை தோழர் இரா. நெடுஞ்செழியன், [illegible] ஏ. அவர்கள், ஆரூர் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,